**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.149/2025</u>**

**ம.சா.2 விஜயரங்கன் த/பெ காசிகவுண்டர் நாள் : 25.06.2026**

**<u>2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவ இடத்திற்கு நான் காலை 9.30 மணிக்கு சென்றேன். நான் தேங்காய் வெட்டுவதற்காக என்னுடைய ஆட்களுடன் சம்பவ இடத்திற்கு சென்றேன். அன்று தீபாவளி என்றால் இல்லை. தீபாவளிக்கு மறுநாள் சென்றேன். நான் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. கிணறு எங்குள்ளது என்றால் வீட்டின் எதிரில் உள்ளது. கார் யாருடையது என்றால் மணி என்பவருடையது. அவர் பழனிச்சாமியின் நண்பர். கார் எந்த வகையான கார் என்று எனக்கு தெரியுமா என்றால் மாருதி கம்பெனியின் மிக பழமையான கார். அதன் மாடல் தெரியவில்லை. பழனிச்சாமி வீட்டிற்கு எதிரே கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் மிக அருகில் தான் தேங்காய் வெட்டி கொண்டிருந்தோம். மணி காரை ஓட்டி வந்து நிறுத்தினார். காரில் குமரேசன் முன் இடது பக்கத்தில் அமர்ந்திருந்தார். காரை ஓட்டியவர் பெயர் தெரிவில்லை. குமரேசனுக்கு 13, 14 வயது இருக்கும். காரை ஓட்டியவருக்கு தோராயமாக அதே வயது இருக்கும். கார் முன் பக்கமாக சென்றதா பின் பக்கமாக சென்றதா என்றால் பின்பக்கமாக சென்றது. காரை ஓட்ட தெரியாது என்பதாலும் உரிமம் இல்லாததாலும், காரை பின்னோக்கி செலுத்திவிட்டார். கிணற்றின் தடுப்பு சுவரை உடைத்து கொண்டு பின்பக்க கதவு திறந்து அதிலிருந்த குமரேசன் முதலில் கிணற்றுக்குள் விழுந்துவிட்டார். அதன் பின்பு அவன் மேல் கார் விழுந்துவிட்டது. கிணற்றில் சுமார் 15 அடி தண்ணீர் இருந்தது. காரையும், குமரேசனையும் வெளியில் எடுக்கும் வரை அங்கு இருந்தேனா என்றால் இருந்தேன். தீயணைப்புதுறை வந்து காரையும், குமரேசனையும் வெளியே எடுத்தார்கள் என்றால் இல்லை. காரையும், குமரேசனையும் வெளியே எடுக்கும் போது மணி மதியம் 3 இருக்கும். குமரேசனின் தந்தை சம்பத் விபத்து நேரத்தில் உயிருடன் இருந்தார். நான் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அவரின் அப்பா புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தீயணைப்பு துறையினர் காரையும் காரின் உள்ளே உயிர் இழந்து இருந்த குமரேசனை இரவு 7 மணி அளவில் மீட்டார்கள் என்றால் இல்லை. அதற்கு முன்பு எடுத்துவிட்டார்கள். சம்பத் கொடுத்த புகாரில் தீயணைப்பு துறையினர் காரையும் காரின் உள்ளே உயிர் இழந்து இருந்த குமரேசனை இரவு 7 மணி அளவில் மீட்டார்கள் என்று

புகார் கொடுத்துள்ளார் என்றால் தெரியவில்லை. நான் பக்கத்து ஊரை சேர்ந்தவர். எனக்கும் அவர்களுக்கும் எந்த உறவு முறைவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த விவரங்களை இன்றுவரை நான் யாரிடமும் கூறுவில்லை. நான் கூறுவது போல் விபத்து ஏதும் நடக்கவில்லை காருக்குள்ளே அமர்ந்த நிலையில் குமரேசன் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.